**தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை-6.**

ந.க.எண்.70358/அ5/இ4/2023, நாள். 11 .03.2024

பொருள் : தமிழ்நாடு பொது சார்நிலைப்பணி – அரசு / நகராட்சி /மாநகராட்சி உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் ஆய்வக உதவியாளர்களுக்கு செய்முறை பாடவேளை கால அட்டவணை தயாரித்து வழங்குதல் சார்ந்து.

பார்வை : 1. கடித எண்.773/ப.க.4(1)/2024. நாள்.31.01.2024.
2. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், ந.க. எண்.70358/அ5/இ4/2023, நாள்.02.02.2024.

---

தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறையின் கீழ் செயல்பட்டு வரும் அரசு / நகராட்சி உயர்நிலைப்பள்ளி / மேல்நிலைப்பள்ளிகளில் பணிபுரியும் ஆய்வக உதவியாளர்களுக்கு 2024 – 2025ஆம் கல்வியாண்டில் 6 முதல் 10 வகுப்பு வரை பயின்று வரும் மாணவ / மாணவியர்களுக்கு ஆய்வகத்தில் செய்முறை பாடவேளை மற்றும் மேல்நிலை வகுப்பு மாணவ / மாணவியர்களுக்கு ஆய்வகங்களில் செய்முறை வகுப்பு பாடவேளைகளுக்கான கால அட்டவணை தலைமையாசிரியரால் தயார் செய்து வழங்கப்படவேண்டும்.

பார்வை 1ல் காணும் அரசு கடிதத்தில் பள்ளிக் கல்வித் துறையின் கீழ் இயங்கும் அரசு / நகராட்சி / மாநகராட்சி / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்களின் கற்றல் அடைவினை மேம்படுத்தும் பொருட்டு ஆய்வகச் செயல்பாடுகள் மூலம் உற்றுநோக்கி ஆய்ந்தறிதல், செய்து கற்றலின் மூலம் நிலையான கற்றல் அனுபவத்தைப் பெறுதல், அறிவியல் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளுதல், மொழி ஆய்வகங்களின் மூலம் மொழி ஆளுமை மூலம் பெறுதல் உள்ளிட்ட பல்வேறு திறன்களை பெறும் நோக்கில் பின்வரும் ஆய்வகங்களின் செல்பாடுகள் அமைந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. அடல் டிங்கரிங் ஆய்வகம்
2. உயர்தொழில்நுட்ப ஆய்வகம் / மெய்நிகர் வகுப்பறை மூலம் கற்பித்தல்
3. அறிவியல் ஆய்வகங்கள்
4. மொழி ஆய்வகங்கள்
5. தொழிற்கல்வி ஆய்வகங்கள்
6. கணித ஆய்வகங்கள்

கல்வி ஆண்டின் தொடக்கத்தில் அனைத்து வகுப்புகளுக்கும் / ஆசிரியர்களுக்கும் கால அட்டவணை தயாரித்த பின்னர் அதன் அடிப்படையில் எந்தெந்த வகுப்பு மாணவ / மாணவிகள் எந்தெந்த ஆய்வகங்களை எந்தெந்த பாடவேளைகளில் பயன்படுத்தலாம் எனத் தலைமையாசிரியர் திட்டமிடுதல் வேண்டும்.

அதன் அடிப்படையில் ஆய்வகங்களுக்கான பயன்பாட்டு அட்டவணையைத் தயார் செய்து பள்ளிகள் திறக்கும் நாளன்று ஆய்வக உதவியாளர்களுக்கும் வழங்கப்படவேண்டும்.

மேற்காண் ஆய்வகங்களில் தங்கள் பள்ளியில் செயல்பட்டுவரும் ஆய்வகங்களின் அடிப்படையில் தலைமையாசிரியர் திட்டமிடுதல் வேண்டும்.

ஆய்வக உதவியாளர்களுக்கு ஆய்வக பணி தவிர பிறபணிகளுக்கு மாற்றுப்பணி வழங்குதல் கூடாது என பார்வை 1-ல் காண் அரசு கடிதத்தின் அடிப்படையில் அறிவுறுத்தப்படுகிறது.

மேற்காண் செய்முறை பாடவேளை அட்டவணை ஆய்வக உதவியாளர்களுக்கு தயார் செய்து தலைமையாசிரியர் வழங்குமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் தங்கள் ஆளுகையின்கீழ் உள்ள உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பள்ளிக் கல்வி இயக்குநர்

11/3/24

பெறுநர்
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்